SRI LANKA

இலங்கை கணக்கீட்டுத் தொழில் நுட்பவியலாளர் கழகம்

# AA2 பரீட்சை - ஜனவரி 2017

**(January 2017 Examination - AA2 Level)**

வினாக்களும் விதந்துரைக்கப்பட்ட விடைகளும்

பாட இலக்கம் **: AA25**

# வியாபாரச் சட்டமும் ஒழுக்கநெறியும்

# (BLE)

இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்
இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாஹிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05

தொ.பே - 011 2 559 669

**கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் ஒரு வெளியீடு**

# இலங்கை கணக்கீட்டுத் தொழில் நுட்பவியலாளர் கழகம்

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு

## AA2 பரீட்சை – ஜனவரி 2017

## (AA25) வியாபார சட்டமும் ஒழுக்கநெறியும்

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**பகுதி - A**

**குறு நோக்குவினாக்கானவிடைகள் (OTQs)**

**பத்து (10) கட்டாய வினாக்கள்.**

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

### வினா 01ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

| வினா | விடைகள் | |
|---|---|---|
| 1.1 | (4) | |
| 1.2 | (3) | |
| 1.3 | (4) | |
| 1.4 | (4) | |
| 1.5 | (4) | |
| 1.6 | (3) | |
| 1.7 | (1) | |
| 1.8 | பதிப்புரிமை | |
| | கைத்தொழில் வடிவமைப்பு | |
| | குறிகள் (வியாபாரக் குறிகள் மற்றும் சேவைக் குறிகள்) | |
| | வியாபாரப் பெயர்கள் | |
| | புவியியல் குறிக்காட்டிகள் | |
| 1.9 | - நிதியியல் குத்தகை | - நேர்க் குத்தகையிடல் |
| | - செயற்பாட்டுக்குத்தகை | - நெம்புதல் குத்தகையிடல் |
| | - விற்றலும் குத்தகையில் மீளப்பெறலும் | - உள்நாட்டு குத்தகை |
| 1.10 | - வர்த்தக விடுமுறை தினங்கள் | |
| | - பௌர்ணமி தின விடுமுறைகள் | |
| | - பொது விடுமுறைத் தினங்கள் | |
| | - வருடாந்த லீவு/விடுகை | |
| | - சமயாசமய/சுகயீன லீவு / விடுகை | |
| | - பிரசவ லீவு/விடுகை (பெண்களுக்கு மட்டும்) | **(மொத்தம் 20 புள்ளிகள்)** |

**பிரிவு *A* இன் நிறைவு**

## பகுதி - B

**05 கட்டாய வினாக்கள்**
**(மொத்தம் 25 புள்ளிகள்)**

## வினா 02ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

நாணயக் கடிதம் முறைமையானது இரு தரப்பினர்களுக்கும் தீர்வை வழங்குகின்றது மற்றும் ஏற்றுமதி வியாபாரத்தில் பொருட்களுக்களுக்கான கொடுப்பனவை மேற்கொள்வதற்கான மிக பொதுவான ஒரு முறைமையாகும்.
நாணயக்கடிதம் இறக்குமதியாளரின் வணிக வங்கியினால் ஏற்றுமதியாளனின் வணிக வங்கிக்கு இறக்குமதிப் பொருளுக்கான கொடுப்பனவை இறக்குமதியாளர் செலுத்தத் தவறும் பட்சத்தில் ஏற்றுமதியாளருக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் என உறுதியளித்து வழங்கப்படுவதாகும்.
இம்முறைமையில், இறக்குமதியாளர் தனது நாட்டு வங்கியில் நாணயக்கடிதத்தை திறப்பார். அவ்வாறு திறந்தவுடன் இறக்குமதியாளர் ஏற்றுமதியாளருக்கு பணத்தை செலுத்துவதற்கான அறிவுறுத்தலை அவரது வங்கிக்கு வழங்குவார்.
செலுத்துமதியான வங்கி ஆவணங்களை ஒரு இருபக்க ஒப்பந்த காப்பாவணமாக வைத்துக்கொள்ளும். தேவைப்பட்டால் வழங்கும் வங்கியில் தஞ்சமாக(பாதுகாப்புக்காக) வைத்திருக்கும்.
போக்குவரத்து ஆவணங்கள் சுமைச்சீட்டை (Bill of lading) உள்ளடக்கியிருக்குமானால், வங்கியானது அனைத்து மூல ஆவணங்களையும் வழங்குமாறு கோரும்.
இதன் காரணமாக, செலுத்தும் வங்கி ஏற்றுமதியாளருக்கு கொடுப்பனவை மேற்கொள்ளத் தயாரக இருக்கும். எளிமையாகக் கூறுவதாயின், குறிப்பிடப்பட்ட ஆவணங்களுக்கு எதிராக விற்பனையாளருக்கு கொடுக்குமதியை மேற்கொள்வதாக வங்கியொன்றினால் வழங்கப்படும் நிபந்தனையுடனான ஏற்பு ஒன்றாகும்.

SRI LANKA

**(மொத்தம் 5 புள்ளிகள்)**

## வினா 03ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

"கைமாற்றத்தகாதது" என்பதன் பொருள் யாதெனில் அது காசோலையை வேறொருவருக்கு உரிமை மாற்றம் செய்ய முடியாது என்பதாகும். மாறாக கைமாற்றம் செய்ய முடியும் என்பதாகும். அவ்வாறு கைமாற்றப்பட்டவருக்கு அக்காசோலையின் மீது கைமாற்றியவருக்கு உள்ளதை விட சிறந்த உரிமை இருப்பதில்லை.
இதன் விளைவாக, கைமாற்றியவருக்கு உரிய உரிமை குறைபாடு கொண்டதாக இருப்பின், கைமாற்றப்பட்டவருக்கு உள்ள உரிமையும் குறைபாடு உடையதாக அமையும்.
இந்த வழக்கில், D (மாற்றீடு செய்யப்பட்டவர்) A யை (மாற்றியவரை) விட சிறந்த உரிமையைப் பெறமாட்டார். A யினது உரித்து குறைபாடு உடையது அதனால், D யினது உரித்தும் குறைபாடு உடையதாகும்.
D க்கு இக்காசோலை மீதான தொகையை B யிடமிருந்து கோர உரித்து இல்லை

**(மொத்தம் 5 புள்ளிகள்)**

## வினா 04ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a)

1) அதிகாரமற்ற வகையில் கணணியொன்றினை அடைவதிலிருந்து பாதுகாப்பதும் அவ்வாறா அனுகுதலை பாதுகாப்பதற்குமான ஏதேனும் செயல்களை செய்தல்.

2) எவ்வித சட்டரீதியான அதிகாரமும் இன்றி தொழிற்பாடொன்றை நிறைவேற்றுவதற்காக கணணியொன்றினை தூண்டுதல் மற்றும் / அல்லது குற்றம் ஒன்றினைப் புரிவதற்கான எண்ணத்துடன் இருத்தல்.

3) அழித்தல், நீக்குதல், பழுதுறச் செய்தல் மற்றும் தககவல்களை மாற்றுதல் போன்ற வகைகளில் கணணியை தவறாக பயன்படுத்துவதற்கான குறித்த செயல்கள்.

4) சட்டரீதியற்ற சாதனங்களைப் பயன்படுத்தி தரவுகளை சட்டரீதியற்றவகையில் ஊடறுத்தல் மற்றும் தகவல்களை அதிகாரமற்ற வகையில் வெளிப்படுத்தல் போன்றன.,

5) குற்றங்களைப் புரிதல், அதற்கு உடந்தையாக இருத்தல் மற்றும் குற்றம் புரிவதற்கு சதி செய்தல் போன்றனவும் தண்டனைக்குறிய குற்றமாகும்.

(b)

1. 2003 ஆம் ஆண்டு 36 ஆம் இலக்க புலமை ஆதன சட்டம்
2. 2006 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க மின்னியல்வழி கொடுக்கல் வாங்கல் சட்டம்
3. 2006 ஆம் ஆண்டு 30 ஆம் இலக்க கொடுப்பனவு சாதனங்கள் மோசடிச் சட்டம்.
4. 2007ஆம் ஆண்டு 24 ஆம் இலகக கணணிவழி குற்றங்கள் சட்டம்.
5. 2003 ஆம் ஆண்டு 27ஆம் இலக்க தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிலநுட்பச் சட்டம்.
6. 2005ஆம் ஆண்டு 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுச்சட்டம்.
7. 1995 ஆம் ஆண்டு 14ஆம் இலக்க சான்று (விசேட ஏற்பாடுகள்) சட்டம்.
8. 1991 ஆம் ஆண்டு 25ஆம் இலக்க இலங்கை தொலைதொடர்பு சட்டத்தின் கீழான 2003இன் உள்ளகத் தொடர்பு விதிகள் (1996 ஆம் ஆண்ட 27ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்படடது.)

**(மொத்தம் 5 புள்ளிகள்)**

## வினா 05ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

a)

பதவி விலகலின் போது பணிக்கொடையை பெறத்தகுதி பெறுவதற்காக, ஊழியர் ஒருவரால் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டிய கட்டளை விதிகள் பின்வருமாறு:

1. நிறுவனத்தின் ஊழியர்களின் எண்ணிக்கை 15 க்கு குறைவில்லாது இருத்தல்.
2. தொழிலிருந்து விலகும் ஊழியர் நிறுவனத்தில் ஆகக் குறைந்தது 5 வருடங்களுக்கு சேவயையாற்றிருத்தல் வெண்டும்.
3. பின்வரும் வகுதிகளை கொண்ட ஊழியர்கள் பணிக்கொடைக்கு உரித்தானவர்கள் அல்லர்.
    - சொந்த வாகன ஓட்டுநர்கள் .
    - வீட்டு சேவையாளர்கள்.
    - ஏதேனும் ஓய்வூதிய திட்ட பங்களிப்பு அல்லாதவைக்கு உரித்தான ஊழியர்கள்

b)

தனது சேவையிலிருந்து விலகும் தினத்தில் உழியரால் பெற்றுக்கொள்ளப்பட்ட சம்பளத்தை கருத்திற்கொண்டு பணிக்கொடையானது கணிப்பிடப்படும்.

பணிக்கொடை = (இறுதியாக பெற்றுக்கொண்ட சம்பளம் (அல்லது 14 நாட்களின் உழைப்பு) / 2) x பூரணப்படுத்தப்பட்ட வருடங்களின் எண்ணிக்கை

எனவே டிலான் ருபா 600,000 பணிக்கொடைக்கு உரித்தானவர்.

**(மொத்தம் 5 புள்ளிகள்)**

## வினா 06ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

சுயாதீனம் இரண்டு அம்சங்களைக் கொண்டது

1) கருத்து/எண்ண சுயாதீனம்

2) தோற்றத்திலான சுயாதீனம்

கருத்து (/எண்ண/மனோ) ரீதியான சுயாதீனம் என்பது எவ்வித செல்வாக்கினாலும் பாதிக்கப்படாது தொழில்சார் ஒருவர் நியாயத் தீர்ப்பை வெளிப்படுத்துவதற்குரிய மனநிலையை வழங்குவதைக் குறிக்கும். மனோரீதயான சுயாதீனம் இருந்தால் மட்டுமே தொழில் சார் ஊழியர் ஒருவர் குறிக்கோளுடனும் நேர்மையுடனும் செயல்படமுடியும்.

தோற்றத்திலான சுயாதீனம் என்பது தொழில் சார் ஊழியரை அவதானித்துக் கொண்டிருக்கும் மூன்றாம் தரப்பினருக்கு கருத்துச் சுயாதீனம் வெளிப்படையான அல்லது மேம்போக்கான நிலையில் காணப்படுகின்றதோ அந்நிலையில் எழுவதாகும்.

**(மொத்தம் 5 புள்ளிகள்)**

**பிரிவு *B* இன் நிறைவு**

aat SRI LANKA

## பகுதி - C

**03 கட்டாய வினாக்கள்**
**(மொத்தம் 30 புள்ளிகள்)**

## வினா 07ற்கு பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a) காப்புறுதியில் இழப்பீட்டு எண்ணக்கரு (கொள்கை) என்பது காப்புறுதியானது இலாபத்திற்காக அல்ல மற்றும் காப்புறுதி செய்யப்பட்டவர் தனது நட்டத்திற்கான இழப்பீட்டை மட்டுமே ஈடுசெய்து கொள்ள முடியுமே தவிர அதை விட அதிகமானதை பெற்றுக்கொள்ள முடியாது.

காப்புறுதி ஒப்பந்தத்தில் காப்புறுதி செய்பவர் காப்புறதி பூட்கைக்கு உட்பட்ட தொகை வரை மட்டுமே உண்மையான நட்டத்தை ஈடுசெய்வதற்குரிய கொடுப்பனவை மேற்கொள்ள முடியும். இந்த வழக்கில், சப்பரமது காப்புறுதி பூட்கையின கீழ் XYZ காப்புறுதிக் கம்பனியிடமிருந்து இழப்பீட்டைப் பெற்றுக் கொள்ளமுடியாது. ஏனெனில் காப்புறுதியிலிருந்து அவர் இலாபம் ஒன்றை உழைப்பதற்கு உரித்தானவரல்லர்.

தொடர்பான சட்டம்: காஸ்டேலியன் எதிர் பிரஷ்டன்

**(06 புள்ளிகள்)**

b)
1. காசோலையானது எழுத்துருவிலான கருவியாகும்.
2. நிபந்தனையற்ற கட்டளையொன்று காசோலையில் உள்ளது.
3. காசோலையானது வாடிக்கையாளரால் அவரது வங்கிக்கு வரையப்படுகின்றது.
4. காசோலையானது வாடிக்கையாளரால் கையொப்பமிடப்படல் வேண்டும்.
5. காசோலையானது கோரிக்கையின் மீது மட்டுமே கொடுப்பனவு செய்யப்படும்.
6. காசோலையானது செலுத்துமதியான சரியான தொகையை குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.
7. யாருக்கு காசோலைக்குரிய தொகை செலுத்தப்படல் வேண்டுமோ அது உறுதியாக குறிப்பிடல் வேண்டும்.
8. வங்கியின் வாடிக்கையாளர்களினால் / கணக்கு வைத்திருப்பவரினால் காசோலையானது உரியவாறு திகதியிடப்படல் வேண்டும்.
9. காசோலைக்கான மூன்று தரப்பினராக வரைபவர், வரையப்படுபவர் மற்றும் கொடுநர் என்போர் இருப்பர்.

**(04 புள்ளிகள்)**
**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## வினா 08ற்கு பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

a) - தனியொருவர் அல்லது 50 பேரை விஞ்சாத எண்ணிக்கையிலான ஆட்கள் ஒரு தனியார் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றை கூட்டிணைப்பதற்கு விண்ணப்பிக்கலாம். எனவே, **அமிந்த** தனது வணிகத்தை ஒரு தனியார் வரையறுக்கப்பட்ட கம்பனியாக பதிவு செய்ய முடியும். அத்துடன் கம்பனியொன்றை கூட்டிணைக்கும் அதே நபர் கம்பனியின் செயலாளராகவும் செயல்பட முடியாது.

விண்ணப்பதாரி 16A பெயர் அங்கீகார விண்ணப்படிவத்தை கம்பனி பதிவாளருக்கு சமரப்பித்தல் வேண்டும்.

**குறிப்பு:** பெயர் தொடர்பாக ஏதேனும் ஒழுங்கற்ற தன்மை காணப்படுமானால் செய்முறையை மேலும் தொடர்வதற்கு பெயரில் திருத்தம் செய்யுமாறு அறிவுறுத்தப்படுவார். எனவே நடைமுறையில் உள்ள பெயரொன்றை பதிவு செய்யுமாறு கோரியிருந்தால் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

- பெயரானது அங்கீகரக்கப்பட்டதன் பின்னர் விண்ணப்பதாரி அகவிதியின் இரண்டு பிரதிகளை விண்ணப்பப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். (பத்திரம் 1 – கம்பனியொன்றின் பதிவுப்பத்திரம், பத்திரம் 18 – பணிப்பாளரின் சம்மத சான்றுப் பத்திரம், மற்றும் பத்திரம் 19 – செயலாளரின் சம்மத சான்றுப் பத்திரம்.)
- கூட்டிணைத்தலில் லிகிதர் எந்த குறைபாடுககளையும் ஆவணங்களில் கானாத பட்சத்தில் அவைகள் பதிவாளருக்கு சமர்ப்பிக்கப்படும். ஏதேனும் திருத்தங்கள் செய்ய வேண்டுமானால் அவற்றை விண்ணப்பதாரியினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**(04 புள்ளிகள்)**

b) 1. **தனியான சட்ட ஆளுமை தோற்றம் பெற்றிருத்தல்**

கூட்டிணைத்தல் மூலம் கம்பனி ஒரு சட்ட ஆளுமையுள்ள ஓர் தனிநபராக தோற்றம் பெறுகின்றது. (கூட்டிணைத்தல் என்பது கம்பனியொன்றை உருவாக்கும் சட்டமாகும்.) பின்னர், கம்பனியானது தனக்கும் அதனை உருவாக்கிய இயற்கை நபர்களுக்குமிடையில் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள முடிகின்றது. கம்பனி தனது சொந்த பெயரில் பிறர் மீது வழக்குத் தொடரவோ அல்லது இக்கம்பனியின் பெயரின் மீது பிறர் வழக்குத் தொடரவோ முடியும். மேலும் கம்பனியொன்று ஒப்பந்தம் செய்ய, வணிக செயற்பாட்டில் ஈடுபட, சொந்தமாக ஆதனங்கள் மற்றும் பணத்தைக் கொண்டிருக்க, ஊழியர்களை வேலைக்கு அமர்த்த, வங்கிக் கணக்குகளை திறப்பதற்கு மற்றும் கடன்களை பெற்றுக்கொள்வதற்கு முடியும்.

2. **கம்பனியானது தனது சொந்த ஊழியர்கள் மீது வழக்குத்தொடர முடியம்.**

தனியான சட்ட ஆளுமை காரணமாக கம்பனியானது தனது சொந்த ஊழியர்கள் மற்றும பணிப்பாளர்களின் செயல் காரணமாக கம்பனிக்கு ஏதேனும் நட்டம் எழுந்திருக்குமானால் அவர்கள் மீது வழக்குத்ததொடர முடியும் என்பது கம்பனிக்குரிய சிறப்பம்சமாகும். வியாபார சட்டமும் ஒழுக்கநெறியும்

3. **தொடர்ச்சியான வாழ்வு**

கம்பனியொன்று அதனது பங்குதாரர்கள் மற்றும் பணப்பாளர்கள் என்போரிடமிருந்து வேறுபட்டு இருப்பதால், அவர்களின் செயற்பாட்டால் கம்பனியானது பாதிப்படைய மாட்டாது. எடுத்துக்காட்டாக, பங்குதாரர் ஒருவர் தனது பங்குகளை விற்பனை செய்வதால் அல்லது ஒரு பணிப்பாளர் பதவிலிருந்து விலகுவதால் அல்லது அவர் இறப்பதால் அல்லது அவர் சித்தசுவாதீனமாவதால் கம்பனியானது பாதிப்படையாது, தொடர்ந்து இயங்கும். கம்பனியொன்று கலைக்கப்படும்போது அல்லது முடிவுறுத்தப்படும் போது அல்லது சட்டரீதியல் முறிவடையும் போதே செயலற்றுப் போகும். பங்குதாரர்களில் வாழ்வெல்லை பாதிக்கப்படுவதால் கம்பனியின் வாழ்வெல்லை பாதிப்படையாது.

4. **வரையறுக்கப்பட்ட பொறுப்பு பற்றி எண்ணக்கரு**

ஒரு வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றில் பங்குதாரர்கள் அவர்கள் கொண்டுள்ள பங்குகளின் பெறுமதிக்கு மேலாக கம்பனியின் கடன்களுக்கு பொறுப்பானவர்கள் அல்லர். இது மூலம் பெரிய

அளவிலான தொகையை பங்குவழங்களின் மூலம் கம்பனியானது சேகரித்துக் கொள்ள முடியும். தனிப்பட்ட பொறுப்புத் தவிர்ப்பு கம்பனிகளின் ஒரு வேறுபட்ட அம்சமாகும்.

5. **தனியான ஆதனங்கள்**

   கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றின் ஆதனங்கள் கூட்டிணைக்கப்பட்ட அமைப்பிற்குள் உள்ளடக்கப்படும். கம்பனி தனது சொந்த பெயரில் ஆதனங்களை வைத்துக்கொள்வதற்கும் பயன்படுத்துவதற்குமான இயலுமையைக் கொண்டுள்ளமை இன்னுமொரு அம்சமாகும்.

ஏந்தவொரு அங்கத்தினரும் கம்பனியின் சொத்துக்களின் உரிமையைக் கோர முடியாது.

**(06 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

SRI LANKA

## வினா 09ற்கு பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a) ஒரு பொதுவான விதியின் படி, முந்திய முகவருடன் கூடிய ஒப்பந்தங்களில் முந்திய முதல்வருக்கு எவ்வித பொறுப்புக்கூறலும் இல்லை. எவ்வாறெனினும், இவ்வழக்கில் ரோஸினது முகவராண்மை முடிவுறுத்தப்பட்டது பற்றி அறியாமலே சில்வா ரோஸியுடன் ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ளார்.

எனவே, மறுக்கவியலாமைக்கு ஆலான முதல்வர் முகவர் உறவு ரோஸிக்கும் குமாருக்கும் ஏற்பட்டுள்ளது.

மறுக்கவியலாமை (Estopple) கோட்பாடு என்றால் வெளிப்படையாகவோ அல்லது உட்கிடையாகவோ எதையாவது நீர் பிரதிநிதிப்படுத்தியிருந்தால் அதனை பின்னர் மறுப்பதில் நீர் தடுக்கப்பட்டுள்ளீர் என்பதாகும்.

எனவே, குமார் வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ ரோஸி அவரது முகவர் எனவும் சில்வா ரோஸியுடன் ஒப்பந்தத்தில் ஈடுபட்டடுள்ளார் என்பதை தூண்டியிருந்தால் மறுக்கவியலாமை முகவராண்மை முறையே குமாருக்கும் ரோஸிக்கும் தோன்றியள்ளது என்பதாகும்.

குமார் மறுக்கவியலாமை முகராண்மையின் படி, ரோஸியுடனான முகவராண்மை முடிவுறுத்தப்பட்டது என்ற உண்மைக்கு எதிராக ரோஸியுடன் ஒப்பந்தம் ஒப்பந்தம் ஒன்றில் ஈடுபட்டமை தொடர்பாக சில்வாவுக்கு பொறுப்புக்கூற வேண்டும்.

இதன் விளைவொன்றாக, சில்வா குமாரிடமிருந்து இழப்பீட்டை பெற உரித்துடையவர்.

**(06 புள்ளிகள்)**

b)
1. முகவர் முதல்வரின் அறிவுறுத்தலை பின்பற்றுதல் வேண்டும்.
2. முகவர் ஒப்பந்தத்தை கவனமாக (diligent) நிறைவேற்றல் வேண்டும்.
3. முகவரது கடமையானது திறமையாகவும் கவனத்துடனும் நடைமுறைப்படுத்த வேண்டும்.
4. முகவர் தானாகவே செயல்பட வேண்டுமேயன்றி மற்றவருக்கு கடமைகளை பாரப்படுத்த (மாற்ற) முடியாது.
5. முகவரது நிதி வகையிலான (fudiciary) கடமைகளை நேர்மையான முறையில் நடந்துக்கொள்வதுடன் முகவருடன் விசுவாசமாக தொடர்புகொள்ளல் வேண்டும்.
6. முகவரது ஆதனங்கள் தொடர்பாக முகவர் கணக்குகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

**(04 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**பிரிவு *C* இன் நிறைவு**

**பகுதி - D**

**கட்டாய வினா**

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

## வினா 10ற்கு பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

a) Aக்கும் Bக்கும் இடையில் ஒரு தபால் மூல ஒப்பந்தம் உள்ளது. எனவே தபால் மூல ஒப்பந்த விதிகள் பிரயோகிக்கப்படும்.

**தரப்பினர்கள் தபால் மூலத்தை ஒரு ஏற்பு ஊடகமாக கருதுவார்களாயின் தபால் மூல விதிகள் பிரயோகிக்கப்பம்.**

- கொடை முனைவாளர் (offeror) வேறு ஏற்பு ஊடகத்தை குறிப்பிட்டிருந்தால் அன்றி, ஒரு தபால் மூலமான கொடைமுனைவிற்கு தபால் மூலமாகவே ஏற்பு செய்யலாம். தரப்பினர்கள் தபால் மூலத்தை பயன்படுத்தலாம் என ஏற்றுக்கொள்ள வேண்டியதன் சந்தரப்பத்தினை காட்டினால் கொடைமுனைவாளர் தபால் மூலம் கொடைமுனைவினை செய்யாத போதும் ஏற்பானது தபால் மூலமாக இருக்கலாம். ஒரு கொடைமுனைவானது (offer) சாதாரண தபால் மூலம் அடைகின்ற போது அன்றி, உண்மையில் அது ஏற்பாளரை எப்போது அடைகின்னறதோ அப்போதே தபால் மூலம் மேற்கொண்டதாக அமையும். இந்த வழக்கின் படி, 10 சனவரி 2016 இல் ஒரு வலுவான கொடைமுனைவு ஏற்பட்டதாக அமையும்.
- தபால் மூலமான ஏற்பானது ஏற்புக்கடிதமானது தயாரிக்கப்பட்டு முறையாக விலாசமிட்டு தபாலில் இட்ட உடனேயே பூரணப்படுத்தப்படுகின்றது. கொடைமுனைவினை பெறுபவரை அது சென்று அடைந்துள்ளாதா இல்லையா என்பதல்ல. தபால் மூல விதியின படி ஏற்பானது தபாலில் இட்ட உடனேயே பூரணப்படுத்தப்பட்டதாகக் கருதப்படும்.
- கொடுக்கப்பட்ட விடயங்களினை அடிப்படையாக, B ஏற்பு கடிதத்தை 13 சனவரி 2016இல் தபாலில் இட்டுள்ளார். எனவே, ஒரு வலுவான ஒப்பந்தமொன்று A க்கும் B க்குமிடையே ஏற்பட்டுள்ளது.
- ஏற்புக்கடிதம் தபாலில் காணாமல்போய் காலதாமதமாகியிருப்பினும் அல்லது கொடைமுனைவாளர் உண்மையை புறக்கணித்திருந்தாலும் ஏற்பானது தபாலில் இடும்பொது நிறைவு பெற்றுள்ளது என்பதாகும்.
- எனவே பிழையான பெறுநருக்கு கடிதம் போய்ச் சேர்நதமையால் எழுந்த காலதாமதம் வலுவான ஒப்பந்தமொன்று உருவாகுவதற்கான செய்முறையை பாதிக்காது. தபால் மூலமான காலதாமதம் முக்கியத்துவமானதல்ல.
- ஏற்பு கடிதம் வழங்கும் திகதி கருத்திற்கொள்ளக்கூடிய விடயமல்ல.
- உண்மையில் கொடைமுனைவை பெறுபவருக்கு தபால் மூலமான மறுப்புக் கடிதம் (revocation) கிடைக்கும் வரைக்கும் அது நிறைவுப்பெற்றதாகக் அமையாது. மறுப்புக் கடிதம் Bயை உண்மையில் அடையும் வரைக்கும் Aலிருந்து டீக்கும் கிடைத்ததாகக் கருதப்படாது.
- மறுப்பானது 18 சனவரி 2016 லிருந்து செல்லுபடியானதாகும். ஆனால் வலுவான ஏற்பு இருக்கும் போது மறுப்பு வலுவிழந்து விடும்.
- எனவே 13 சனவரி 2016 இல் வலுவான ஒப்பநதம் ஒன்று இருந்தமையால் A தனது காரை 16 சனவரி 2016 இல் விற்பனை செய்யமுடியாது.

- Aக்கும் Bக்கும் ஒரு வலுவான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டமையால் A மறுப்புக்கடிதத்தை தபாலிலி இடமுன்பே B ஒப்பந்த முறிவுக்கான கோரிக்கையையும் மற்றும் ஒப்பந்த முறிவுக்கான இழப்பீட்டையும் A க்கு எதிராக மேற்கொள்ள முடியும்.
- ஒப்பந்த முறிவுக்காக A க்கு எதிராக B வழக்குத் தொடர முடியும்.

b)

1. இங்கு பொருள் விற்பனை ஒப்பந்தம் ஒன்று உள்ளது. மற்றும் பொருள் ஒப்பந்தம் என்பது விற்பனையாளர் ஆதனத்தின் (பொருளின்) மீதான உரிமையை விலையொன்றுக்காக வாங்குவோருக்கு மாற்றம் செய்வதைக் குறிக்கும்.
2. பொருளின் மீதான உரிமையை மாற்றுதல் தொடர்பாக ஓர் எண்ணம் தெளிவாக இல்லாதவிடத்து மற்றும் பொருள் விற்பனை ஒப்பந்தத்தின் மூலக்கரு (விடயம்) உறுதியற்றதாக இருப்பின் அவ்வாறான பொருள் மீதான உரிமை விநியோகிக்கும் நிலையிலான ஒருவருக்கு ஒருவர் சம்மதம் தெரிவித்த உடனேயே ஒப்பந்தப் பொருள் விற்னையாளரிடமிருந்து வாங்வோரை சென்றடையும்.
3. விற்பனையாளர் இணங்கண்ட ஒப்பந்த பொருளின் மீது, வாங்குபவர் சமமதம் கொண்ட உடனேயே அல்லது கொள்வனவாளர் இணங்கண்ட ஒப்பந்தப்பொருள் மீது விற்பனையாளர் சம்மதம் கொண்ட உடனேயே ஒப்பந்தப்பொருள் விற்னையாளரிடமிருந்து வாங்வோரை சென்றடையும்.
4. ஒரு தொகை கணணிகளில் 100 கணணிகள் தோற்றத்துக்குள்ளான கணணி தொகுதிகளுக்குள் உட்பட்டுள்ளன.
5. எனினும், அவை ஒப்பந்தத்திற்குள் உட்படும் தருணத்தில் உறுதியற்றவைகளாக இருந்தன. கமல் நிமலுடன் ஒப்பந்தம் செய்யும் போதே இவைகள் குறித்தப் பொருட்களாக கருதப்பட்டன. அத்துடன் தனக்கான 100 கணணிகளையும் தனியாக களஞ்சியப்படுத்தி வைக்குமாறும் நிமாலுக்கு அறிவுறுத்தியிருந்தார். அதற்கு இணங்க நிமாலும் அக்கணணிகளை களஞ்சியப்படுத்தி வைத்திருந்தார்.
6. கமாலின் அறிவுறுத்தலின் படி நிமால் 100 கணணிகளை தனித்து களஙஞ்சியப்படுத்திய போதே அவ்வாறான 100 கணணிகளின் மீதான உரித்துடைமையானது விற்பனையாளரிடமிருந்து வாங்குவோருக்கு மாறியுள்ளது.
7. எனவே, இவ்வழக்கில் (இடர்) நட்ட அச்சமானது கமாலை சார்ந்தாக உள்ளது மற்றும் 100 கணணிகளின் மீதான நட்டத்தை கமாலே பொறுப்பேற்க வேண்டும்

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

**பிரிவு *D* இன் நிறைவு**

***Notice :***

These answers complied and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.
These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers".
The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2017 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*
*All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*